# தென்காசி நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2023–24

நகர்மன்றத் தீர்மான எண்.713

நாள்.28.06.2024

# தென்காசி நகராட்சி

# 2023–2024–ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

## 1. நிறுவனமும் மேற்பார்வையும்

தென்காசி நகராட்சி, தென்காசி புலியூர் ஆகிய இரண்டு வருவாய் கிராமங்களைக் கொண்டதாகும். இந்நகராட்சி 27.01.1965ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 196ம் எண். அரசாணையின்படி 01.04.1965 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக முதன்முதலாக அமைக்கப்பட்டது. பின்னர் 16.10.1977ம் தேதிய அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் ஆணை எண்.665.ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 22.05.1998ம் தேதிய ஆணை எண் 85ன்படி முதல் நிலை நகராட்சியாகவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 02.05.2023ம் தேதிய ஆணை எண் 57ன்படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

இந்நகராட்சியின் பரப்பளவு 26.15 சதுர கிலோமீட்டராகும். 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்குப்படி மக்கள் தொகை 70545. இதில் ஆண்கள் 34890 பெண்கள் 35616 மற்றவர் 24 ஆகும். 2021ம் ஆண்டின் உத்தேச மக்கள் தொகை கணக்குப்படி மக்கள் தொகை 78891. இதில் ஆண்கள் 39422 பெண்கள் 39413 மற்றவர் 56 ஆகும்.

## 2. மன்றம்

2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் அரசு ஆணை எண். 135 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.06.1996ன்படி இந்நகர் பகுதி 33 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு , நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

| | |
|---|---|
| 1. பொதுவார்டு | 20 |
| 2. பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது | 9(வார்டு எண். 2, 4, 12, 17, 21,23,29,31,33) |
| 3. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (பெண்கள்) | 2 (வார்டு எண். 10, 27) |
| 4. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (ஆண்கள்) | 2 (வார்டு எண். 3, 20) |
| மொத்தம் | 33 வார்டுகள் |

| வ.எண் | வார்டு | பெயர் | பதவி |
|---|---|---|---|
| 1 | 18 | திரு.ர.சாதிர் | நகர்மன்றதலைவர் |
| 2 | 29 | திரு.கே.என்.எல்.சுப்பையா | துணைத்தலைவர் |
| 3 | 1 | திருமதி.வசந்தி | உறுப்பினர் |
| 4 | 2 | திரு.உமா மகேஷ்வரன் மு | உறுப்பினர் |
| 5 | 3 | திருமதி.கல்பனா கெ | உறுப்பினர் |
| 6 | 4 | திருமதி.ராமசுமதி | உறுப்பினர் |
| 7 | 5 | செல்வி.கார்த்திகா | உறுப்பினர் |
| 8 | 6 | திருமதி.சுமதி இ | உறுப்பினர் |
| 9 | 7 | திருமதி.முப்புடாதி ர | உறுப்பினர் |
| 10 | 8 | திருமதி.பொன்னம்மாள் க | உறுப்பினர் |
| 11 | 9 | திரு.நாகூர்மீரான் அ | உறுப்பினர் |
| 12 | 10 | திரு.முகம்மது மைதீன் செ | உறுப்பினர் |
| 13 | 11 | திருமதி.சுல்தான் சரிப் மு | உறுப்பினர் |
| 14 | 12 | திருமதி பூமாதேவி மு | உறுப்பினர் |
| 15 | 13 | திருமதி.ரெஜினா அ | உறுப்பினர் |
| 16 | 14 | திருமதி.சீதாலெட்சுமி க | உறுப்பினர் |
| 17 | 15 | திரு.சங்கரசுப்பிரமணியன்.க | உறுப்பினர் |
| 18 | 16 | திருமதி.ஜெயலெட்சுமி சி | உறுப்பினர் |
| 19 | 17 | திருமதி.ஆஷிக் முபினா மு | உறுப்பினர் |
| 20 | 19 | திருமதி.பானு.எஸ் | உறுப்பினர் |
| 21 | 20 | திரு.செய்யது சுலைமான் (எ) ரஃபீக் | உறுப்பினர் |
| 22 | 21 | திரு.அபூபக்கர் மு | உறுப்பினர் |

| | | | |
|---|---|---|---|
| 23 | 22 | திரு.இராமசுப்பிரமணியன் க | உறுப்பினர் |
| 24 | 23 | திருமதி.சுனிதா மு | உறுப்பினர் |
| 25 | 24 | திருமதி.மகேஸ்வரி க | உறுப்பினர் |
| 26 | 25 | திருமதி மஞ்சுளா மு | உறுப்பினர் |
| 27 | 26 | திரு.முத்துகிருஷ்ணன் லி | உறுப்பினர் |
| 28 | 27 | திரு.காதர் மைதீன் அ | உறுப்பினர் |
| 29 | 28 | திரு.குருசாமி சு | உறுப்பினர் |
| 30 | 30 | திரு.லெட்சுமண பெருமாள் | உறுப்பினர் |
| 31 | 31 | திரு.முருகன் ஈ | உறுப்பினர் |
| 32 | 32 | திரு.சுப்பிரமணியன் ஆ | உறுப்பினர் |
| 33 | 33 | திரு.ராமகிருஷ்ணன் ரா | உறுப்பினர் |

**3. அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன**

சாதாரணக் கூட்டம் – 7

அவசரக் கூட்டம் – 3

சிறப்புக் கூட்டம் – 0

உள்ளூர்திட்டக் குழுக் கூட்டம் – 0

ஒப்பந்தக் குழுக் கூட்டம் – 0

வரிமேல் முறையீட்டுக்குழுக் கூட்டம் – 0

நியமனக்குழுக் கூட்டம் – 0

**4. ஆணையாளர்:**

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவிபரப்படி ஆணையாளர்களாக பணிபுரிந்து வந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.சூ.மு.பாரிஜான், ஆணையாளர் | 01.04.2023 முதல் 27.06.2023 வரை |
| 2 | திரு. ந.சோ.கண்ணன்,ஆணையாளர்(பொ) | 28.06.2023 முதல் 02.07.2023 வரை |
| 3 | திரு.ப.பாலமுருகன்,ஆணையாளர் | 03.07.2023 முதல் 18.07.2023 வரை |
| 4 | திரு.சோ.பார்த்தசாரதி,ஆணையாளர்(கூ/பொ) | 19.07.2023 முதல் 31.08.2023 வரை |
| 5 | திரு.எஸ்.ரவிச்சந்திரன்,ஆணையாளர் | 01.09.2023 முதல் நாளது தேதி வரை |

**5. நகராட்சி பொறியாளர்**

| | | |
|---|---|---|
| 1 | திரு.ந.சோ.கண்ணன்,நகராட்சிப்பொறியாளர் | 01.04.2023 முதல் 31.07.2023 வரை |
| 2 | திருமதி.கே.எஸ்.ஹசீனா,நகராட்சிப்பொறியாளர் | 01.08.2023 முதல் நாளது தேதி வரை |

**6. மேலாளர் மற்றும் கணக்கர்**

| | | |
|---|---|---|
| 1 | திரு.செ.கணேசன், மேலாளர் (பொ) | 01.04.2023 முதல் 06.06.2023 வரை |
| 2. | திரு.சி.சங்கர் கணேசன், மேலாளர் | 07.06.2023 முதல் நாளது தேதி வரை |
| 3. | திரு.செ.கணேசன், கணக்கர் (பொ) | 01.04.2023 முதல் 03.10.2023 வரை |
| 4. | செல்வி.மா.ரத்தினம், கணக்கர் | 04.10.2023 முதல் நாளது தேதி வரை |

**7. வரி விதிப்பு**

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி சொத்து வரி விதிக்கப்படுகிறது,

| | | |
|---|---|---|
| 1. | பொது காரியங்கள் | 6 சதவிகிதம் |
| 2. | குடிநீர்வரி | 6 „ |
| 3. | கல்வி வரி | 2.50 „ |
| 4. | நூலகவரி | 1. 20 „ |
| | மொத்தம் | 15.70 சதவிகிதம் |

**8.சாலைகள்**

அறிக்கை ஆண்டின் இறுதியில் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள சாலைகள் இந்நகராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகின்றது.

| | | கிலோ மீட்டர் |
|---|---|---|
| தார் சாலை | – | 64.735 |
| சிமெண்ட் கான்கிரீட் சாலை | – | 11.011 |
| சிமெண்ட் தளக்கறகள் | – | 27.027 |
| மண் சாலை | – | 4.597 |
| இதர வகைகள் | – | 0.000 |
| **மொத்தம்** | **–** | **107.370** |

**9.பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–23**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்டவாறு உள்ள இடங்களில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு ரூ31.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சி CMS Church அருகில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| 2 | தென்காசி நகராட்சி மின்சார வாரியம் பஸ் ஸ்டாப் அருகில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| 3 | தென்காசி நகராட்சி VTSR மஹால் அருகில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| 4 | தென்காசி நகராட்சி நடுப்பேட்டை பள்ளிவாசல் அருகில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| 5 | தென்காசி நகராட்சி வார்டு எண் 5 களக்கோடி தெருவில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| 6 | தென்காசி நகராட்சி TNHB நுழைவுவாயிலில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| 7 | தென்காசி நகராட்சி வடக்கு மவுண்ட் ரோடு பால்பண்ணை அருகில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| 8 | தென்காசி நகராட்சி வார்டு எண் 32 தலைமை தபால் நிலையம் முக்கு பகுதியில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| 9 | தென்காசி நகராட்சி வார்டு எண் 23 வாய்க்கால்பாலம் அருகில் 10 மீட்டர் மினி உயர்கோபுர (LED) மின் விளக்கு அமைத்தல் | 3.50 |
| | மொத்தத் தொகை | 31.50 |

மேற்கண்ட பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது

**10.சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-23**

சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–23ன் கீழ் ரூ2.50 இலட்சம் மதிப்பீட்டில் தென்காசி நகராட்சி உழவர் சந்தையில் குடிநீர் வசதி அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 11.சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023-24

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-24ம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திருS.பழனிநாடார் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 32ல் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 3.00 |
| 2 | வார்டு எண் 27ல் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 3.00 |
| 3 | வார்டு எண் 20ல் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 3.00 |
| 4 | வார்டு எண் 2ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு அருகில் உள்ள ஸ்ரீசக்தி விநாயகர் கோவில் அடிபம்பில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் | 3.00 |
| 5 | வார்டு எண் 25ல் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 3.00 |
| 6 | தென்காசி நகராட்சிக்குடபட்ட 7வது வார்டு கீழப்புலியூர் மயானத்தில் தகனமேடை அமைத்தல் | 5.00 |
| 7 | வார்டு எண் 12ல் நியாய விலைக் கட்டிடம் கட்டுதல் | 13.00 |
| 8 | வார்டு எண் 6 மற்றும் 15 மலையான் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் | 11.00 |

மேற்படி பணிகளில் வரிசை எண் 5 மற்றும் 8ல் உள்ள பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

## 12. திறந்த வெளியில் மலம் கழிக்கும் செயலினை ஒழிக்கும் திட்டம் 2022-23

பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

## 13. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2023-24

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023-24ன் கீழ் கீழ்கண்டவாறு எடுக்கப்பட்டுள்ளது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மங்கம்மாள் சாலை**(145004R205), **சிவஇளங்கோ நகர்**(145003R196, 145003R197, 145003R198), **அப்துல் கலாம் நகர்**(145005R241), **மைனாப்பேரி ரோடு**(145022R464), **களக்கோடி தெரு**(145004R206), **சொர்ணபுரம் மேட்டுத் தெரு**(145021S095 & 145021S097), **ஆகிய தெருக்களில் உள்ள மண்சாலையினை தார்சாலையாக மாற்றுதல்** | **208.00** |

மேற்படி பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளது.

## 14. 15வது மத்திய நிதிக்குழு பரிந்துரை மான்ய திட்டம் (15th CFC) 2023-24

15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2023-24ன் கீழ் கீழ்கண்டவாறு பணி எடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Modernization of Existing Gasifier Crematorium at Ayraperi Road Burial Ground in Tenkasi Municipality | 54.00 |

மேற்படி பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## 15. நமக்கு நாமே திட்டம் (NNT) 2023-24

நமக்கு நாமே திட்டம் 2023-24ன் கீழ் கீழ்கண்டவாறு பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 3 மங்கம்மாள் சாலையில் தார் சாலை அமைத்தல் | 30.00 |
| 2 | வார்டு எண் 3 சிவஇளங்கோ நகரில் தார் சாலை அமைத்தல் | 28.00 |
| | மொத்தத் தொகை | 58.00 |

மேற்படி பணிகள் நடைபெற்று வருகிறது.

## 16. நமக்கு நாமே திட்டம் (NNT) 2023-24

நமக்கு நாமே திட்டம் 2023-24ன் கீழ் கீழ்கண்டவாறு பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காளிதாஸ் நகர் (145001R040), சிந்தாமணி (145031R570), சிந்தாமணி (145031R571), ஆகிய தெருக்களில் தார்சாலை மேம்படுத்துதல் மற்றும் இரயில்வே மேட்டு 3வது தெரு (145004S004), இரயில்வே மேட்டு 1வது தெரு (145004S005), இரயில்வே மேட்டு 1வது குறுக்கு தெரு (145005S011), மலையான் தெரு 3வது குறுக்கு தெரு (145006S017), மலையான் தெரு 4வது குறுக்கு தெரு (145006R257), மவுண்ட் ரோடு 2வது குறுக்கு தெரு (145010R315), பாறையடி தெரு 1வது குறுக்கு சந்து (145011S048), பாறையடி தெரு 2வது குறுக்கு சந்து (145011S049), மலையான் தெரு மஞ்சனக்கார தெரு கிழக்கு ரோடு (145015R364), மலையன் தெரு தெரு பள்ளி 2வது ரோடு (145015R368), ஹரிஹர விநாயகர் கோவில் தெரு சந்து (145015L047), ஹரிஹர விநாயகர் கோவில் 1வது குறுக்கு தெரு (145015S072), கன்னிமாரம்மன் கோவில் தெரு (145016R374), மரைக்காயர் 1வது தெரு (145017R380), மரைக்காயர் 2வது தெரு (145017R381), நடுபேட்டை தெரு (145018R395, 145018R396), பெரியசாமி கோவில் தெரு (145018R398), நடுபேட்டை தெரு (145018R400), பெரியசாமி கோவில் தெரு (145018R404, 145018R405, 45018S086) ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல். (சிப்பம் எண் 1). | 76.00 |
| 2 | இரயில்வே ரோடு to மங்கம்மாள் சாலை(145003R153) தார் சாலை மேம்படுத்துதல் மற்றும் எல்.ஆர்.எஸ் பாளையம் 1வது குறுக்கு தெரு (145012R337), எல்.ஆர்.எஸ் பாளையம் 2வது குறுக்கு தெரு (145012S052), | 75.50 |

| | | |
|---|---|---|
| | செண்பக விநாயகர் கோவில் தெரு (145013R356), கூளக்கடை தெரு சந்து (145014L040), மேலமுத்தாரம்மன் கோவில் 1வது குறுக்கு சந்து (145014L043), கூளக்கடை தெரு 3வது குறுக்கு சந்து (145014L042), மேலமுத்தாரம்மன் கோவில் தெரு (145014R362), வடக்கு ஒப்பனை தெரு (145028L109, 145028L110), சுவாமி சன்னதி பஜார் (145029L116),மேல மாசி வீதி (145030R546,145030L118), தெற்கு மாசி வீதி (145030S134), முடுக்கு விநாயகர் கோவில் தெரு (145031R553), காமராஜர் தெரு (145007L008), புலியூர் தெரு (145007L009), நேரு தெரு (145007L011), உச்சி மாகாளி அம்மன் கோவில் 2வது தெரு (145008R286), உச்சி மாகாளி அம்மன் கோவில் 4வது தெரு (145008S026) ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் (சிப்பம் எண் 2). | |
| 3 | உச்சி மாகாளி அம்மன் கோவில் 1வது தெரு(145022R451), புதுமனை 5வது தெரு(145024R489), ஆகிய தெருக்களில் தார்சாலை மேம்படுத்துதல் மற்றும் குளத்தூர் ஐய்யனார் கோவில் தெரு (145019R413), முகைதீன் பள்ளிவாசல் தெரு (145019R414), செய்யது குருக்கள் பள்ளிவாசல் தெரு (145020R422, 145020R423), முப்புடாதி அம்மன் கோவில் தெரு (145023R477), புலிகுட்டி விநாயகர் கோவில் தெரு (145023R480), புதுமனை 3வது & 4வதுதெரு (145024R490), சிதம்பரேஸ்வரர் கோவில் தெரு (145025S116), கீழப்பாளையம் (145026R509), அனைக்காரை தெரு (145027R515, 145027R516, 145032S150, 145032S152), ஆசாத் நகர் (145033S156), குலசேகநாதர் கோவில் தெரு (145033R602), ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் (சிப்பம் எண் 3). | 75.50 |
| | மொத்தத் தொகை | 227.00 |

மேற்படி பணிகள் நடைபெற்று வருகிறது.

## 17. சுவர்ணஜெயந்தி திட்டம்

எவ்வித மானியமும் வழங்கப்படவில்லை.

## 18.தூய்மை இந்தியா திட்டம் – நகர்புறம் 2.0 (SBM - URBAN 2.0)

தூய்மை இந்தியா திட்டம் நகர்ப்புறம் 2.0ன் கீழ் கீழ்கண்டவாறு பணிகள் எடுக்கப்பட்டுள்ளது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூர் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள 28450 கன.மீ குப்பைகளை (Legacy Waste) Bio-Mining _y« m¥òw¥gL¤Jjš | 203.45 |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆய்க்குடி செல்லும் சாலையில் உள்ள MCC மையத்தில் பொருள் மீட்பு வசதிகள் (Material Recovery Facilities) மையம் அமைத்தல் | 42.50 |
| 3 | இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா நகரிவ் உள்ள MCC மையத்தில் பொருள் மீட்பு வசதிகள் (Material Recovery Facilities) மையம் அமைத்தல் | 42.50 |
| | மொத்தத் தொகை | 72.00 |

மேற்படி பணிகளில் வரிசை 2 மற்றும் 3ல் உள்ள பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

## 19. தெருவிளக்குகள்

தென்காசி நகராட்சி பகுதியில் 107.37 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | தெரு விளக்குகளின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40W FTL to 20W LED | 1769 |
| 2 | 70W SVL to 40W LED | 12 |
| 3 | 150W SVL to 60W LED | 300 |
| 4 | 250W SVL to 120W LED | 259 |
| 5 | 250W MHL to 120W LED | 92 |
| 6 | T5 Lamp 4x24W to 60W LED | 100 |
| 7 | CFL 4x24W to 70W LED | 100 |
| 8 | 400W MHL to 200W LED | 66 |
| Total Per Year | | 2698 |

மேற்படி தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி செப்டம்பர் 2002 முதல் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நகரில் 100 சதவீதம் தெருவிளக்குகள் எரியச் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தெருவிளக்குகள் அனைத்தும் ஒளிர் உமிழ் விளக்குகளாக மாற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 20.ஆரம்பக் கல்வி நிலையங்கள்

இந்நகராட்சியில் 1 நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் 3 நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் உள்ளன.

## 21.பூங்காக்களும் தோட்டங்களும்

அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ35.00 இலட்சம் மதிப்பீட்டில் வெல்கம் நகரில் பூங்கா மேம்படுத்தும் நடைபெற்று வருகிறது.

## 22.குடிநீர் விநியோகம்

இந்நகரில் **1961**ம் ஆண்டு முதல் குற்றாலம் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் ஏற்கனவே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5.65+3.65 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 17 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 1999ம் ஆண்டில் குடிநீர் அபிவிருத்திக்காக தென்காசி குடிநீர் திட்டம் ரூ.1038.17 லட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பணிகள் முடிக்கப்பட்டு 01.01.2005 முதல் நகராட்சியால் இத்திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையம் இந்நகரிலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள தாமிரபரணி ஆற்றுப் படுகையின் அருகில் ஊர்க்காடு என்ற

கிராமத்தில் உள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 47 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

5 இடங்களில் நிரேற்று நிலையங்களும் 4 மேல்நிலைத் தொட்டிகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்நகராட்சிப் பகுதியில் 182 பொதுக் குடிநீர் குழாய்களும், 290 ஆழ் குழாய் கிணறுகளும் உள்ளன. மேலும், சிறுமின்விசை பம்புகள் 145 எண்ணங்கள் உள்ளன.

இந்நகராட்சியில் 15429 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. சராசரியாக நாளொன்றுக்கு 95 LPCDம், கோடை காலங்களில் 85 LPCDம், வழங்கப்பட்டு வருகிறது

மீட்டர் முறையில் உள்ள வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள்

வீட்டு உபயோகத்திற்காக உபயோகிக்கப்படும் குடிதண்ணீர் ஒவ்வொரு 1000 லிட்டருக்கு ரூ6.50 வீதமும் வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு குடிதண்ணீருக்கு ரூ15.50 வீதமும், கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வீட்டு உபயோகத்திற்கு உள்ள இணைப்புகளுக்கு குறைந்த கட்டணம் மாதம் 1-க்கு ரூ65/- வீதமும் நிர்ணயிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றது. வீட்டு உபயோகத்திற்கு 14864 இணைப்புகளும், வீடு அல்லாத உபயோகத்திற்கு 228 இணைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

**23.குடிநீர் அபிவிருத்தி திட்டம்:**

தினசரி குடிநீர் சீராக வழங்குவதற்கு ஏதுவாக பகிர்மான குழாய்கள் மாற்றியமைத்து தேவையான இடங்களில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய, குடிநீர் விநியோகம் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ107.30 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சென்னை நகராட்சி நிர்வா ஆணையாளர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது.

**24.டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம்**

2022–2023ம் ஆண்டில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதிஉதவித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு சுகாதாரத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**25. நூல் நிலையங்கள்**

இந்நகராட்சியில் ஒரு வாசகசாலை மட்டும் நடத்தப்பட்டு வந்தது. மேற்படி வாசகசாலை அரசாணை எண்.37 நாள். 03.04.2002 ந.நி.ம.கு.வ.துறையின் படி 15.05.2002ம் தேதி நூலக துறைக்கு தானமாக வழங்கப்பட்டு விட்டது. எனவே நூல் நிலையங்கள் எதுவும் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

**26. ஆரம்பக் கல்வி**

இந்நகராட்சி பராமரிப்பின் கீழ் ஒரு நடுநிலைப்பள்ளியும், மூன்று துவக்கப்பள்ளிகளும் இயங்கி வருகின்றன. ஆசிரியர்கள் 01.04.1990 முதல் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டு கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகின்றார்கள்.

**27. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

இந்நகராட்சியில் 15.09.1982 முதல் சத்துணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நகராட்சி பாடசாலை சத்துணவு கூடங்கள் 4ம் அரசு மான்யத்தில் செயல்படுத்தப்படுகிறது. ஏப்ரல் 2008 முதல் தினந்தோறும் ஒரு குழந்தைகளுக்கு ஐந்து முட்டைகள் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது கூடுதலாக வாரம் ஒரு நாள் உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

**28. மருத்துவ நிலையங்கள்**

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. மாவட்ட அரசினர் மருத்துவமனை இந்நகரத்தில் செயல்பட்டு வருகிறது. **19** தனியார் மருத்துவமனைகளும் உள்ளன.

**29. நகர்நல மையம்**

அரசாணை (நிலை) 130 சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் துறை மூலம் நகராட்சி கட்டுப்பாட்டிலிருந்த நகர்நல மையத்தினை பொதுசுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதால் மேற்படி நகர்நலமையம் பொதுசுகாதாரத் துறையின் கீழ் ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**30. குடும்ப நலம்**

2023–24ம் ஆண்டில் இந்நகராட்சிக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

**31. பொது சுகாதாரம்**

இந்நகராட்சியில் ஒரு துப்புரவு அலுவலரும், மூன்று துப்புரவு ஆய்வாளர்களும்,ஒரு களப்பணி உதவியாளரும், 49 துப்புரவு பணியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். நகரில் 17 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி நடைபெற்று வருகிறது.

| | |
|---|---|
| 1. லாரி ஓட்டுநர்கள் | 3 |
| 2. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 7 |
| 3. துப்புரவு தொழிலாளர்கள் | 49 |

**32. தொற்றுநோய்**

அறிக்கை ஆண்டில் தொற்றுநோய் எதுவும் ஏற்படவில்லை

**33. கொசு ஒழிப்புத் திட்டம்**

இந்நகராட்சிப் பகுதியில் அரசினால் அனுமதிக்கப்பட்ட கொசு ஒழிப்புத் திட்டம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பிரிவின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் விபரம்.

1. களப்பணியாளர் – ஒரு பணியாளர் உள்ளார்.

2. மஸ்தூார் – 105 தினக்கூலி பணியாளர்கள்

இத்திட்டத்தை சுகாதார ஆய்வாளர்கள் மேற்பார்வையிட்டு வருகிறார்கள்.

**34. பிறப்பு மற்றும் இறப்பு**

இந்நகராட்சிப் பகுதியில் ஏற்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பணியினை மூன்று துப்புரவு ஆய்வாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அறிக்கை ஆண்டில் **1751** பிறப்புகளும் **731** இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை **இல்லை** அறிக்கை ஆண்டில் பிறப்பு விகிதம் **27.36** ஆகும். இறப்பு விகிதம் **9.76** ஆகும்.

**35. போலியோ ஒழிப்புத் திட்டம்**

கீழ்க்கண்டவாறு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

| நாள் | பயனடைந்தோர் |
|---|---|
| 03–03–2024 | 7494 |

**36. பள்ளி சிறுவர் நலத்திட்டம்**

மேற்கண்ட திட்டத்தில் 18100 பள்ளிச் சிறுவர்கள் பயனடைந்துள்ளனர்.

**37. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்**

நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகள், வர்த்தக நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் முறையாக மட்கும் கழிவுகள் தனியாகவும், மட்காத மறுசுழற்சி செய்யக் கூடிய கழிவுகள் தனியாகவும் பிரிக்கப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட நான்கு இடங்களில் கொண்டு சென்று உரமாக தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு, மட்கும் கழிவுகளை கொண்டு கலவை உரம் தயார் செய்யப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை முழுமையான அளவில் செயல்படுத்திடவும், கலவை உர விற்பனையினை அதிகப்படுத்திடவும், பொதுமக்களிடையே குப்பைகளை பிரித்து வழங்க விழிப்புணர்வை ஏற்படுத்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

1. அண்ணாநகர்
2. ஆய்க்குடி ரோடு
3. மத்தளம்பாறை
4. தபால்நிலையம் பின்புறம்

**38. கலவை உர அபிவிருத்தி**

இந்நகராட்சியில் அம்பாசமுத்திரம் சாலையில் கலவை உரக்கிடங்கு அம்பை ரோடு மத்தளம்பாறை கிராமத்தில் 3.03 ஏக்கர் மற்றும் கடையநல்லூர் வட்டம், போகநல்லூர் கிராமத்தில் 8.25 ஏக்கர் மொத்தம் 11.28 ஏக்கர் பரப்பளவில் நகராட்சிக்குச் சொந்தமான கலவை உரம் தயாரிக்கும் இடம் உள்ளது.

**39. பலன் தரத் தக்க வருவாய்கள்**

இந்நகராட்சியிலிருந்து ஒரு வாரச்சந்தையும், ஒரு தினசரி சந்தையும் செயல்பட்டு வருகிறது. 2023–2024 ஆண்டில் மேற்படி இனங்கள் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூ.18,01,146 ஆகும்.

**40. பேரூந்து நிலையம்**

இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பேரூந்து நிலையம் இயங்கி வருகிறது. பேரூந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேரூந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 12/– வீதம் கட்டணம் குத்தகைதாரர் மூலம் வசூலிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. பேரூந்து நிலையத்திற்குள் வந்து போகும் பேரூந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (குத்தகை) | ரூ. | 9,63,000 |
| 2. பேரூந்து நிலைய கடைகள் கட்டணங்கள் வசூல் | ரூ. | 72,47,454 |
| மொத்தம் | ரூ. | 82,10,454 |

**41. கட்டணக் கழிப்பிடம்**

இந்நகராட்சி புதிய மற்றும் பழைய பேரூந்து நிலையத்திலும், கூளக்கடை பஜார் அருகிலும் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு குத்தகைதாரர் மூலம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குளிப்பதற்கு கட்டணம் நபர் 1– க்கு ரூ. 5.00 வீதமும் கழிப்பறைக்கு கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ. 3.00 வீதமும் நிர்ணயம் செய்து வசூல் செய்யயப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் இந்த இனத்தின் மூலம் மொத்த வருமானம் ரூ.27,52,050 ஆகும்.

**42. சாலை ஓரக் குத்தகை**

இந்நகராட்சிப் பகுதி சாலை ஓரங்களில் வைத்து வியாபாரம் செய்யும் சிறிய தற்காலிக கடைகளிலிருந்தும் தெருக்களில் தலைச்சுமையாகவும், சைக்கிளிலும் மற்றும்

வண்டிகளிலும் வைத்து வியாபாரம் செய்பவர்களிடமிருந்து கட்டணமாக ரூ.7,34,999 அறிக்கை ஆண்டில் வரப்பெற்றது.

**43. பலன் தரும் மரங்கள்**

நகராட்சி எல்கையிலுள்ள மரங்களில் பலன் தரும் மரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் வகையில் வரப்பெற்ற வருமானம் ரூ.54,616/–

**44. அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்**

அறிக்கை ஆண்டில் உரிமையாணைகள் வழங்கப்பட்டதன் பேரில் நகராட்சிக்கு அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமக் கட்டணங்கள்மூலம் வருமானம் வரப்பெற்றுள்ளது, மேற்படி கட்டணங்கள் மூலம் நகராட்சிக்கு ரூ. 7,04,125/– வருவாய் வரப்பட்டுள்ளது.

45**. கல்வி வரி**

சொத்துவரி விதிப்புடன் 2.5 சதவீதம் கல்விவரி விதிக்கப்படுகிறது. காலி மனைவரி சதுர அடியின் அடிப்படையில் காலிமனைவரி விதிக்கப்படுகிறது.

**46. நகர அமைப்புத் திட்டங்கள்**

நகர அமைப்புத் திட்டம் தொடர்பான பணிகள் செய்வதற்கு ஒரு நகர அமைப்பு அலுவலரும் ஒரு நகரமைப்பு ஆய்வாளரும் பணிபுரிந்து வருகிறார்.

**47. நகர் அளவு**

இந்நகர் பகுதி சர்வே செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு ஒரு நகர அளவர் மற்றும் இரண்டு சங்கிலி ஆள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

**48 ஆக்கிரமிப்பு**

இந்நகராட்சி தெருக்கள் முறைப்படி அளவு செய்யப்பட்டுள்ளது.

**49. (அ) முழுமைத் திட்டம்**

நகரின் எதிர் கால வளர்ச்சியைக் கருதி முழுமைத் திட்டம் அரசு உத்திரவு எண் 815 நாள் 24.7.1984ல் இணக்கம் பெறப்பட்டு அரசு உத்திரவு எண் 9 நாள் 9.1.92ல் அரசு முழுமைத் திட்டத்திற்கு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு அரசிதழில் 5.2.1992ம் தேதியில் பிரசுரிக்கப்பட்டது.

மேற்படி தென்காசி முழுமைத் திட்டம் தற்கால வளர்ச்சியின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட்டு, அரசாணை எண் 169 வீ.வ.ந.வ.துறை நாள் 13.7.06ல் அரசின் ஒப்புதல் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**50. தொழில் வரி**

தொழில் வரி புதிய தொழில்வரி சட்டத்தின்படி விதிக்கப்பட்டுள்ளது. தொழில்வரி அறிக்கை ஆண்டில் இந்த தலைப்பின் கீழ் தொழில் வரி ரூ. 84.47 இலட்சம் வசூலாகி உள்ளது.

**51. கேளிக்கை வரி**

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி கேளிக்கை வரி விதிக்கப்படுகிறது.

**52. சொத்து மாற்றங்கள் பேரில் வரி:**

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விதிப்படி சொத்து மாற்றங்களின் பேரில் முத்திரைக் கட்டணவரி சார்பதிவாளரால் விதிக்கப்பட்டு நகராட்சிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**2023–2024–ம் ஆண்டில் சொத்துவரி மொத்த கேட்பு வசூல்**

| இனம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| வரி இனம் | 729.38 | 697.60 | 31.78 |
| வரியில்லா இனம் | 186.83 | 157.97 | 28.86 |
| மொத்தம் | 916.21 | 855.57 | 60.64 |

**53. மொத்த வரவு செலவு விபரம்**

**2023–2024ம் ஆண்டில் வரவு செலவு விபரம்**

மொத்த வரவு ரூ. **34.91** கோடி
மொத்த செலவு ரூ. **45.31** கோடி

**54. கடன்களும் முன் பணங்களும்**

கடன்களுக்கான தவணைத் தொகை **31.03.2023** வரை நிலுவையின்றி அரசுக்கு செலுத்தப்பட்டது.

**55. வரி விதிப்பு தொகுப்பு**

| | |
|---|---|
| மொத்த கட்டிட வரி விதிப்புகள் | **33094** |
| நடப்பு ஆண்டில் வரி செய்யப்பட்ட புதிய வரி விதிப்புகள் | **578** |

**56. பொதுவான விபரங்கள்**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியின் பொது நிர்வாகம் திறம்பட நடந்தது. இந்நகராட்சியின் நிர்வாகம் சீராகவும், செம்மையாகவும் நடைபெற எல்லா ஒத்துழைப்பையும் நகர்மன்ற பொறியாளர், துப்புரவு அலுவலர் மற்றும் அனைத்து பணியாளர்களும் நல்கினர்.

**57. மின் ஆளுமை**

இந்நகராட்சியில் 1997ம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் மூலம் சிறப்பான முறையில் நகராட்சிகளில் கணினிமயமாக்கல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தற்போது இந்நகராட்சியில் 30 கணினிகள் , 27 லேசர் பிரிண்டர் மற்றும் 4 டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டருடன் பொதுமக்களுக்கு சிறப்பான சேவை செய்யப்பட்டு வருகிறது.

1) சொத்துவரி, தண்ணீர்கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் பொதுமக்களுக்கு கணினி மூலம் ரசீது வழங்கப்பட்டு வருகிறது.
2) பிறப்பு இறப்பு சான்று கணினி மூலம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது
3) இந்நகராட்சியில் இயல்புநிலை கணக்குகள் கணினிமயமாக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் பிறப்பு, இறப்பு பதிவுகள் சென்னை NIC Serverல் பதியப்பட்டு உலகமெங்கும் உள்ள இணைய தளத்தில் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் தகவல்கள் தவறாது இந்நகாட்சியில் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு பொதுமக்கள் இணையதளம் மூலம் தகவல் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம் மூலம் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் பதில் இணையதளம் மூலமே அனுப்பப்படுகிறது.

இந்நகராட்சியில் ரூ. ஒரு இலட்சம் மதிப்பீட்டிற்கு மேலாக மேற்கொள்ளப்படும் பணிகளின் ஒப்பந்த புள்ளிகள் இணைய தளம் மூலம் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

5/7/2024

ஆணையாளர்,
தென்காசி நகராட்சி.

5/7/24